மேல் நிலைப்பள்ளியில் றார். வழங்கி பேசினார்.

# கொரோனா வைரஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சி




சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் அரசு கலைக்கல்லூரியில், கொரோனா வைரஸ் குறித்த, விழிப்புணர்வு கூட்டம் கல்லூரி முதல்வர் சாந்தி தலைமையில் நடந்தது.

**கிள்ளை, பிப். 13–**

சிதம்பரம் அடுத்த சி.முட்லூர் அரசு கல்லூரியில், என்.எஸ்.எஸ்., மற்றும் சிதம்பரம் அண்ணாமலை நகர் ராஜாமுத்தையா மருத்துவ கல்லூரி இணைந்து, கொரோனா வைரஸ் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின.

கல்லூரி முதல்வர் சாந்தி தலைமை தாங்கினார். கணித துறைத் தலைவர் மீனா முன்னிலை வகித்தார். என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் டார்லிங் குயின் வரவேற்றார். டாக்டர்கள் தேவி, விக்னேஷ் அம்பாயிரம், முருகானந்தம், செந்தில்முருகன் ஆகியோர் கொரோனா வைரஸ் குறித்தும், அதை தடுக்கும் வழிமுறைகள், தமிழக அரசு எடுக்கும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கி பேசினர்.

துறை தலைவர்கள் சேகர், லோகராஜன், ரவி மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.